**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>**

முன்னிலை:-திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ம் நாள் வியாழக்கிழமை

***<u>இடைமனு எண். 53/2021 in அசல் வழக்கு எண்: 3/2018</u>***

1. கோவிந்தசாமி (இறந்தார்)
2. வீராசாமி .... மனுதாரர்கள்/வாதி மற்றும் Proposed party

/எதிர்/

1. கடலூர் மாவட்ட ஆட்சியர்
2. சிதம்பரம் தாலுக்கா வட்டாட்சியர்
3. மஹாதேவன் (இறந்தார்)
4. ராதாகிருஷ்ணன்
5. வைத்தியநாதசாமி
6. தெய்வநாயகம்
7. அரிஹரன்
8. சற்குணாம்பாள்
9. சுமதி
10. சாந்தி
11. நவீன்ராஜ்
12. M.சந்தோஷம்
13. M.மனோகரன்
14. M.விஜயகுமார்
15. செல்வநாயகி
16. விமலா
17. பிரேமா பழனிசாமி ….. எதிர்மனுதாரர்கள்/1 முதல் 11 பிரதிவாதிகள்/ 12 முதல் 17 Proposed பார்ட்டிகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 04.08.2021-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.கலியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 1, 2, 5, 7 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் இறந்தும், 4, 6, 10 முதல் 17ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஞானசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

இம்மனுவானது கட்டளை 22 விதி 9-ன் கீழ் அசல் வழக்கில் இறந்த 3ம் பிரதிவாதிக்கு வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட Abatement-ஐ ரத்து செய்துகொண்டு மேல் உத்தரவு செய்ய வேண்டுமாய் இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுரக்கம்:-***

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், 1ம் வாதி 1 முதல் 6 பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களில் பிராதில் கண்டபடி பரிகாரம் கேட்டிருந்தாரென்றும், அதில் கண்ட அம்சங்களை இதன் ஓர் அம்சமாக பாவிக்க வேண்டியது அவசியமாகிறது என்றும், தாவா பெண்டிங்காக இருந்தபோது 1ம் வாதி/கோவிந்தசாமி காலமாகியதினால் IA.No.408/2019-ல் பிரதிவாதிகள் 1 முதல் 11 பேர்களையும், 2ம் மனுதாரரையும் வாரிசுகளாய் பாவித்து 2ம் மனுதாரரை 2ம் வாதியாகவும், 7 முதல் 11 பேர்களை 7 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்க மனு போட்டு, அதில் 18.12.2020-ல் அனுமதிக்கப்பட்டு, அதன் பேரில் திருத்தல் மனு போட்டுள்ளதாகவும், IA.No.408/2019 அமுலில் இருந்த போது 3-ம் பிரதிவாதி/மஹாதேவன் Intestate-ஆக காலமாகி விட்டதினால் வழக்கில் கண்ட 12 முதல் 17 பேர்களை அவர் வாரிசாக கோர்ட் வரவு பேப்பரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கு முன்பாக 24.12.2020-ல் 3ம் பிரதிவாதி இறந்த விபரம் தெரிவிக்கப்பட்டு, அது ரிக்கார்டாகி Steps என்று உத்திரவாகி இருந்தது என்றும், ஆனால் மேற்படி 14.12.2020-ல் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் ஆர்டர் செய்யப்படவில்லை என்று ரிட்டனாகி விட்டது என்றும், வழக்கு 15.12.2020-லிருந்து 18.12.2020-க்கு ஒத்திப்போனது என்றும், 18.12.2020-ல் மேற்படி இரண்டு மனுக்களையும் திரும்ப திறந்த கோர்ட்டில் தாக்கல் செய்ய முற்பட்டபோது அது வழக்கறிஞரிடம் திரும்ப கொடுக்கப்பட்டு, வழக்கு Passover ஆகி 18.12.2020-ல் IA.No.408/2019-ல் அனுமதிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் திருத்தல் கோரும் மனு போடப்பட்டதாகவும், மேற்படி 18.12.2020ல் ஏற்பட்ட ஆர்டரை Review செய்து, மற்றும் தாக்கல் செய்யப்பட்டு அத்துடன் இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டதாகவும், அவைகளுக்கு விரோமன்னியில் இந்த மனு தாக்கல் செய்யப்படுகிறது என்றும், 3ம் பிரதிவாதி 26.09.2020-ல் இறந்து 90 நாட்களாகி விட்டதினால் வாரிசு சேர்க்கக் கோருவது Abate ஆகி விட்டதாக Technical-ஆக கூறலாம் என்றும், ஆனால் IA.No.408/2019-ல் 14.12.2020-லேயே 3ம் பிரதிவாதி இறந்ததற்கு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதினால்

மனுதாரர் தரப்பில் எவ்வித டிலேயும் இல்லை என்றும், ஆகவே 3ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் சேர்க்காமல் abate ஆகியிருப்பபதால் அது ரத்து செய்யப்பட்டு வாரிசு கோரும் மனு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும், இறந்த 3ம் பிரதிவாதிக்கு வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட அபேட்மெண்டடை ரத்து செய்துகொண்டு மேல் உத்தரவு செய்ய வேண்டி இருக்கிறது என்றும், அப்படி இல்லாவிடில் மனுதாரருக்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**3. 12-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை 4, 6, 10, 11, 13 முதல் 17-ம் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக் கொண்டதன் சுருக்கம்:**

இந்த நம்பரில் 26.09.2020ல் காலம் சென்ற 3ம் பிரதிவாதி மகாதேவனுக்கு 12 முதல் 17 நபர்களை வாரிசுகளாக சேர்த்து மேல் உத்தரவு செய்ய வேண்டும் என்று கொடுத்துள்ள மனு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும், தள்ளுபடிக்கு உகந்தது என்றும், இந்த நம்பரில் இறந்து போன வாதிக்கு 2ம் மனுதாரரை மட்டும் வாரிசாக சேர்க்க வேண்டும் என்று கொடுத்துள்ளதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் வாதி கோவிந்தசாமியின் மற்ற வாரிசுகளான 7 முதல் 11 எதிர்மனுதாரர்களை எந்த அடிப்படையில் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ள என்ற விபரத்தை அபிடவிட்டில் சொல்லப்படவில்லை என்றும், மனுதாரர் கொடுத்துள்ள அபிடவிட்டில் 1 மற்றும் 2 பாராவில் கண்ட அம்சங்களை இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுதளிக்கிறார் என்றும், ஆகையால் மனுதாரர் 3ம் பிரதிவாதிக்கு 12 முதல் 17 எதிர்மனுதாரர்களை வாரிசுதாரர்களாகவும் சேர்க்க வேண்டும் என்று கொடுத்துள்ள மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

**4. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது அசல் வழக்கானது விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த மனுவின் 3ம் எதிர்மனுதாரரான மஹாதேவன் 26.09.2020-ல் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டதாகவும், அவருக்கு 12 முதல் 14 எதிர்மனுதாரர்கள் மகன்கள் என்றும், 15 முதல் 17 நபர்கள் மகள்கள் என்றும், அவர்களை தவிர

மஹாதேவனுக்கு வேறு வாரிசுகள் இல்லை என்றும், 3-ம் பிரதிவாதிக்கோ அவா் வாரிசுகளுக்கோ தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், காலம் சென்ற 3-ம் பிரதிவாதி/3-ம் எதிர்மனுதாரர் மஹாதேவனுக்கு இந்த மனு 12 முதல் 17 நபர்களை வாரிசுகளாக சேர்க்க மனுதாரர் இந்த இடைமனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த 12 முதல் 17 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் என்பதாலும், எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை தாக்கல் செய்திருந்தபோதும் அசல் வழக்கில் பிறப்பிக்கும் தீர்ப்பானது 12 முதல் 17 வரையான எதிர்மனுதாரர்களை அவர்களது உரிமையை கட்டுப்படுத்தக் கூடியது என்பதாலும், அவர்கள் இவ்வழக்கை பொறுத்தவரை அவசியமான தரப்பினர்கள் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட அபேட்மென்ட்டை ரத்து செய்து கொண்டு வாரிசு மனுவை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டுமென்ற இந்த மனுவை அனுமதிப்பதால் அசல் மனுவின் தன்மையில் மாற்றம் ஏதும் ஏற்படப் போவதில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்த இந்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்ல சொல்ல அவரால் உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட திங்கள் 05-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-.V.Geetha)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.